# DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 283/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.2 |
| | | Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சேகர் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : நடராஜன் | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 23.05.2024

**முதல் விசாரணை**

நான் தற்போது மருத்துவ காரணங்களுக்காக 6 மாதங்களுக்கு முன்பு ஓய்வு பெற்றுவிட்டேன். நான் உடுமலை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்த போது கடந்த 21.04.2022 ம் தேதி உடுமலை மாரியம்மன் கோவில் தேரோட்ட பாதுகாப்பு அலுவலாக நானும், என்னுடன் உதவி ஆய்வாளர் சரவண குமார், முதல் நிலை காவலர் கோவிந்தராஜ் மற்றும் பத்ரா ஆகியோர்கள் தேர் திருவிழாவிற்காக தேருக்கு முன்பு பாதுகாப்பு அலுவலில் இருந்த போது தேர் உடுமலை தளி ரோட்டு வழியாக சக்தி விநாயகர் கோவில், நாடார் மண்டபம், தலைகொண்டம்மன் கோவில் வழியாக சுற்றி வந்து உடுமலை – பொள்ளாச்சி ரோடு அருகே வந்த போது இந்து முன்னனி திருப்பூர் தெற்கு மாவட்ட செயலாளர் பப்பீஸ் அவருடன் உடுமலை தெற்கு ஒன்றிய செயலாளர் நவீன் இருவரும் இரவு சுமார் 09.30 மணிக்கு தேருக்கு முன்னாடி வந்து இந்து முன்னனியினருக்கு தான் முதல் மரியாதை நாங்கள் தான் தேர் இழுப்போம் என்று சொல்லி தகராறு செய்து கொண்டு உடுமலை – பொள்ளாச்சி ரோட்டில் தலைகொண்டம்மன் கோவில் முன்பு உட்கார்ந்து கொண்டார்கள். பொது

மக்களையும், தேரையும் நகரவிடாமல் தடுத்தார்கள். நானும், அங்கு அலுவலில் இருந்த உதவி ஆய்வாளரும் சமாதானம் செய்து எதிரிகளை அனுப்பி வைத்தோம். இரவு 09.50 தேர் நிலைக்கு வந்த போது முன்பு நடந்த பிரச்சனையை மனதில் வைத்துக் கொண்டு பப்பீஸ் மற்றும் நவீன் ஆகிய இருவரும் தகராறு செய்து ரோட்டில் உட்கார்ந்து போக்குவரத்துக்கும், பொது மக்களுக்கும் இடையூறாகவும், எங்களை பணி செய்யவிடாமலும் இடையூறு செய்தார்கள். பப்பீஸ் இறந்து விட்டதாக கேள்விப்பட்டேன். எதிரி நவீன் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார் அவர் ஆஜர் எதிரி தான். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் சரவணகுமார் தனியறிக்கை தயார் செய்து வழக்கு பதிவு செய்தார். என்னை ஆய்வாளர் விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

21.04.2022 ம் தேதி காவல் நிலைய பொறுப்பு அலுவலர் யார் என்றால் ஞாபகம் இல்லை. அன்றைய தினம் சப் டிவிசனின் உள்ள போலீசாரும், பட்டாலியனில் உள்ள போலீசாரும், ஆயுதப் படையில் உள்ள போலீசாரும் தேர் விழா பாதுகாப்பு பணிக்கு அமர்த்தப்படுவார்கள் என்றால் சரிதான். இந்த தேர் திருவிழாவில் குற்ற தடுப்பு நடவடிக்கைக்காக போலீசார் விடீயோ பதிவு செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. எப்போதும் வீடியோ எடுப்பது வழக்கம் என்றாலும் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக கூறுகிறீர்கள் என்றால் சரியல்ல. அன்றைய தினம் எத்தனை மணிக்கு தேரோட்டம் தொடங்கியது என்றால் மாலை சுமார் 4 மணிக்கு கிளம்பியது. இரவு சுமார் 09.50 மணிக்கு நிலைக்கு வந்தது.

PSO 710 ன் படி அன்றாட நிகழ்வுகளை பதிவு செய்யும் பதிவேடு வைத்திருப்பீர்கள் என்றால் சரிதான். PSO 711 ன் படி அதனை 5 ஆண்டுகள் வரை பாதுகாக்க வேண்டும் என்றால் எத்தனை ஆண்டுகள் பாதுகாக்க வேண்டும் என்ற வருடம் நினைவில் இல்லை. நீங்கள் பராமரிக்கும் நோட்டில் தேர் திருவிழாவில் இந்த நடந்த பிரச்சனைகள் சம்மந்தமாக குறிப்புகள் உள்ளதா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. உண்மையில் சம்பவம் நடைபெறவில்லை என்பதால் தான் ஞாபகம் இல்லை என்றும், வழக்கிற்காக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. அன்றைய தினம் எத்தனை மணிக்கு பணி முடிந்தது என்றால் ஞாபகம் இல்லை.

பொதுவாக தேர் திருவிழாவின் போது பழனி – உடுமலை ரோட்டில் போக்குவரத்து நிறுத்தப்பட்டிருக்கும் என்றாலும், வாகனங்கள் செல்லாது என்றாலும் சரிதான். உதவி ஆய்வாளரிடமோ, காவல் ஆய்வாளரிடமோ பொது மக்களோ, வாகன ஓட்டிகளோ எதிரிகளுக்கு எதிராக எந்தவித எழுத்து பூர்வமான புகார்களும் கொடுக்கப்படவில்லை என்றால் அது பற்றி தெரியாது. வாய் மொழியாக கூறினார்கள். வாய் மொழியாக எத்தனை பேர்கள் கூறினார்கள் என்றாலும், அவர்கள் பெயர், முகவரி என்ன என்றால்

எனக்கு ஞாபகம் இல்லை. உண்மையில் அது போல் யாரும் புகார் கொடுக்காததால் தான் ஞாபகம் இல்லை என்று வழக்கிற்காக கூறுகிறீர்கள் என்றால் சரியல்ல.

அந்த காலகட்டத்தில் எதிரி பப்பீஸ் என்பவருக்கு பாதுகாப்புக்காக Gun man பாதுகாப்பு போடப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. பொதுவாக தேர் வடம் பிடித்து இழுக்கும் போது அனைத்து சமுதாய தலைவர்களுக்கும், இந்து அமைப்பை சேர்ந்த தலைவர்களுக்கும் முதல் மரியாதை செய்வது வழக்கம் என்றால் சரிதான். பொதுவாக தேர் திருவிழாவின் போது தேரை வடம் பிடிக்கும் போது இந்து முன்னனி தலைவர்கள் தான் மாரியம்மனுக்கு சீர் செய்து பின்னிட்டு தேரை வடம் பிடிப்பது வழக்கம் என்றால் அது பற்றி தெரியாது. இந்து முன்னனி மாநில, மாவட்ட தலைவர்களை காவல் அதிகாரிகள் தேருடன் ஒரு சில பகுதிகளுக்கு உடன் செல்லக் கூடாது என்று அறிவுறுத்தினார்கள் என்றால் தெரியாது. அது குறித்து இந்து முன்னனி தெற்கு மாவட்ட செயலாளர் காரணம் கேட்டதன் பேரில் உதவி ஆய்வாளர் பொய் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. தவறு.

ஆஜர் எதிரி இந்து முன்னனியில் இருந்தார் என்பதற்கு எந்த ஆவணமும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். உண்மையில் இது போன்று சம்பவம் நடைபெற்றால் போலீசார் உடனடியாக அவர்களை கைது செய்து அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்துவது தான் வழக்கம் என்றால் கைது செய்ய மாட்டோம். அப்புறப்படுத்துவோம். குற்ற செயல் நடைபெற்றால் கைது செய்யப்படுவார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தன்மை பொறுத்து கைது செய்வோம். அனைத்திற்கும் கைது செய்ய மாட்டோம். நான் எனது உதவி ஆய்வாளருக்கு கட்டுப்பட்டு அவர் சொல்வதை செய்வீர்கள் என்றால் உயரதிகாரிகள் சொல்வதை கடைபிடிப்பது முதல் பணி. நடக்காததை நடந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் தவறு.

**மறு விசாரணை** இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.283/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.3 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கோவிந்தராஜ் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : ரத்தினசாமி | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 23.05.2024

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது உடுமலை காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக உள்ளேன். இந்த வழக்கின் போது உடுமலை காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 21.04.2022 ம் தேதி மாலை 04.00 மணிக்கு உடுமலை மாரியம்மன் கோவில் தேர் திருவிழாவிற்கு பாதுகாப்பு அலுவலுக்காக உதவி ஆய்வாளர் திரு.சரவணக்குமார் மற்றும் என்னுடன் தலைமை காவலர் சேகர் மற்றும் முதல் நிலை காவலர் பத்ரா ஆகியோர்கள் பணியில் இருந்த போது தேரானது தளி ரோடு வழியாக நாடார் கல்யாண மண்டபம், தலை கொண்டம்மன் கோவில் வழியாக தேருக்கு முன்புறம் பாதுகாப்பு அலுவலில் இருந்த போது அப்போது இரவு சுமார் 09.30 மணியளவில் இந்து முன்னனி தெற்கு மாவட்ட செயலாளர் பப்பிஸ் மற்றும் உடுமலை தெற்கு மாவட்ட செயலாளர் நவீன் ஆகியோர்கள் தேர் வடம் இழுப்பது முதல் உரிமை இந்து முன்னனியினருக்கே என்று சொல்ல அங்கிருந்த பக்தர்களுக்கும், இந்து முன்னனியினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. உடனே உதவி ஆய்வாளர் சரவணக்குமார் மற்றும் எங்களுடன் பணியில் இருந்த காவலர்கள் அவர்களை சமாதானம் செய்து வைத்தோம். பின்பு இரவு சுமார் 09.50 மணியளவில் உடுமலை – பொள்ளாச்சி ரோடு

மாரியம்மன் தேர் நிலை அருகே ஏற்கனேவ நடைபெற்ற தள்ளு முள்ளு பிரச்சனை தொடர்பாக சாலையில் அமர்ந்து வாகனங்களை விடமாட்டோம் என்று கூறி போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் எதிரிகள் பப்பீஸ் மற்றும் ஆஜர் எதிரி நவீன் இடையூறு ஏற்படுத்தினார்கள். காவலர்களை பணி செய்ய விடாமல் போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் இடைஞ்சல் ஏற்படுத்தினார்கள். உதவி ஆய்வாளர் அவர் தனியறிக்கை மூலம் வழக்கு பதிவு செய்தார். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காவல் ஆய்வாளர் எங்கு, எப்போது விசாரித்தார் என்றால் 22 ம் தேதி உடுமலை காவல் நிலையத்தில் காலை 08.00 மணிக்கு விசாரித்தார். 21 ம் தேதி தேருக்கு முன்புறம் பணி ஒதுக்கப்பட்டிருந்தது. எத்தனை பேருக்கு ஒதுக்கினார்கள் என்பது ஞாபகம் இல்லை. அன்றைய தினம் தேர் எத்தனை வடம் பிடிக்கப்பட்டது என்றால் 4.15 மணி ஆகும். தளி ரோடு, நாடார் மண்டபம், தலை கொண்டம்மன் கோவில் என்று சொல்லியுள்ள நிலையில் அங்கு எப்போது தேர் வந்தது என்றால் சரியாக எப்போது வந்தது என்று நேரத்தை கணக்கெடுக்கவில்லை. தேர் திருவிழாவின் போது சாலை போக்குவரத்து முற்றிலும் நிறுத்தப்பட்டிருக்கும் என்றால் சரிதான். எனது நோட் புக்கில் முதல் விசாரணையில் கூறியுள்ள சம்பவங்களை குறிப்பு எடுத்துள்ளீர்களா என்றால் இல்லை. உண்மையில் முதல் விசாரணையில் சொன்ன சம்பவங்கள் நடைபெறாததால் தான் குறிப்புகள் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

இந்து முன்னனியைச் சேர்ந்த பப்பீஸ் என்பவருக்கு Gun man பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது என்றால் தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் தார் ரோடு என்றால் சரிதான். நான் எனது உதவி ஆய்வாளருக்கு கட்டுப்பட்டு அவர் சொல்வதை செய்வீர்கள் என்றால் உயரதிகாரிகள் சொல்வதை கடைபிடிப்பது முதல் பணி. நடக்காததை நடந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் தவறு.

**மறு விசாரணை** இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.